ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1954/33 - 2016 පෙබරවාරි මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.02.18

*1954/33 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு**

*அறிவித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.09.21 ஆம் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வி அமைச்சருக்கு "அபே கம" நிறுவனம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளமையினால்,*

*அதன் நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாக சபைக்குப் பொறுப்பளிக்கப்படுகின்றது.*

*அகில விராஜ் காரியவசம்,*
*கல்வி அமைச்சர்.*

*கல்வி அமைச்சு,*
*"இசுருபாய",*
*பத்தரமுல்ல,*
*2016, பெப்புருவரி 16.*

**அட்டவணை**

*அபே கம நிறுவனத்தின் நிர்வாக சபை தொடர்பான அறிவித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015.09.21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வி அமைச்சருக்குப் பொறுப்பளிக்கப்பட்ட அபே கம நிறுவனத்தின் நிர்வாகம், நிதி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் இதற்குப் பின்னர் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கமைய இணைப்புச் செய்யப்படும் நிர்வாக சபைக்கு இப்பணிகளை மேற்கொள்வதற்காக முறையான சட்ட ரீதியிலான கோட்பாட்டை வகுப்பதற்காக அமுல்படுத்தப்படும் இடைக்கால ஒழுங்கு விதிகளாகப் பொறுப்பளிக் கப்படுகின்றன.*

*நிர்வாக சபை கீழ் குறிப்பிடப்பட்டவர்களைக் கொண்டிருக்க வேண்டும் :-*

(i) *கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் தலைவர்*
(ii) *கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் செயற்பாட்டுப் பணிப்பாளர்*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(iii) கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் ஏனைய நான்கு அங்கத்தவர்கள்
(iv) உத்தியோகபூர்வ அதிகாரத்திற்குரிய அங்கத்தவர்கள் கீழ் குறிப்பிடப்பட்டவர்கள், அவ்வாறாயின் :-

(அ) கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் நியமிக்கப்படும் அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்

(ஆ) கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் பிரதம நிதி உத்தியோகத்தர்

(இ) பொதுத் திறைசேரியின் செயலாளரினால் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்

சபையின் கூட்ட நடப்பெண் 05 உத்தியோகத்தர்களாக இருக்க வேண்டும்.

நிர்வாக சபையின் அதிகாரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைய வேண்டும் :-

(i) அபே கம நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்.
(ii) நிறுவனத்தின் செயற்பாடுகளுக்காகத் தேவையான உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ளலும் நிர்வாகப் பணிகளும்
(iii) அபே கம நிறுவனத்தின் அபிவிருத்திக்காக திட்டங்களைத் தயாரித்து அமுல்படுத்தல் மற்றும் மேற்பார்வை
(iv) நிர்வாக சபையின் அதிகாரங்களை அமுல்படுத்துவதற்காக நிதியத்தைத் தாபித்து முன்னெடுத்தல்.

*3 - 134*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.